தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை - திரு.ம.சங்கரநாராயணன், பி.ஏ.,

ந.க.எண். 34612 / 2014 / அ1 நாள் 27.02.2015

---

பொருள் பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் தொகுதி - தொகுதி IV உட்பட்ட பதவிகள் - 2013-2014ம் ஆண்டு போட்டி தேர்வின்மூலம் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தட்டச்சருக்கு பணிநியமனம் வழங்கப்பட்டது - தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை 1) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் செயலாளர் கடிதம் 5828/PSD-F 2014/ நாள் 06.08.2014.

2) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.34612 /2014 / அ1 நாள் 28,08.2014.

3) தஞ்சாவூர் கோட்ட கலால் அலுவலரின் கடிதம் ந.க.01/2015/அ நாள் 28.01.2015.

4) மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள்

----------

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 2013-2014ம் ஆண்டு போட்டித்தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2ல் காணும் செயல்முறை ஆணை மூலம் தஞ்சாவூர் கோட்ட கலால் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரிந்து வரும் திருமதி.ஆ.இராமலெட்சுமி என்பவரது பணியினை அவர் தட்டச்சர் நிலையில் பணியேற்ற நாளான **04.09.2014** முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவரது பணி 2013-2014ம் ஆண்டுகளுக்கான தொகுதி-IV பணிக்கான தேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்கள்மீது வழங்கப்படும் தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்யப்படுகிறது. இந்த நிபந்தனையை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளவும் தொடர்புடைய கட்டுப்பாட்டு அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது)
தஞ்சாவூர்.

பெறுநர்
திருமதி.ஆ.இராமலெட்சுமி
தட்டச்சர்,
கோட்ட கலால் அலுவலகம், தஞ்சாவூர். - உரிய வழியாக.

28.2.15

நகல் - கோட்ட கலால் அலுவலர், தஞ்சாவூர்.
இணைப்பு - பணிப்பதிவேடு ஒரு தொகுப்பு - தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் மற்றும் பணிப்பதிவேடு கிடைக்கப்பெற்றமைக்கான ஒப்புதலை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

நகல் - அ1.